# குடும்பவிளக்கு சிறப்பு– நாவலில் - மக்கட் பேற்றின்

15

**மு.முத்துக் குட்டி, இளங்கலை தமிழ்**
**காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி.**

**ஆய்வுச் சுருக்கம்**

பாவேந்தர் பாரதிதாசன் ஒப்பற்ற புரட்சிக்கவி. பாரதிதாசன் இயற்றிய குடும்ப விளக்கு நூலில் குடும்ப அமைப்பின் சிறப்பைக் கூறியுள்ளார். குடும்பம் என்பது பெண்களை அடிப்படையாகக் கொண்டது. அன்பால் பிணைந்தது என்ற கருத்தை வலியுறுத்துகிறார். குடும்ப விளக்கு நூலில் குழந்தைப்பேறு பற்றிய செய்திகள் சிறப்பாய் இடப்பெற்றுள்ளன. அவற்றை விளக்குவதே இந்த ஆய்வுக்கட்டுரை ஆகும்.

**ஆய்வு நோக்கம்**

பரபரப்பான சமூக சூழலில் மக்கள் தங்கள் குடும்பத்தை மறக்கின்றனர் குழந்தைப்பேறு அதனை வளர்த்தல் போன்றவை இயந்திரமாக்கப்பட்டுள்ளன. குடும்பவிளக்கு நூல் மூலம் மக்கட்பேற்றின் சிறப்பு அதன் பெருமை குறித்து இக்கால சமூகத்திற்கு விளக்குவதே ஆய்வின் நோக்கம்.

**மக்கட்பேறு – செய்திகள்**

நகைமுத்து, வேடப்பன் வாழ்த்தல், நகைமுத்து கருவுறுதல், பிள்ளை பெறுதல், தாய், தோழி, தங்கம் பாட்டி, மலர்க்குழல் பாட்டி ஆகியோரின் தாலாட்டுகள் குழந்தை தூக்கும் முறை ஓராண்டு நிறைவு, சோறூட்டல், நிலாக்காட்டல், பேச்சு, அன்பு பெருகுக, நடத்து வந்த கரும்பு புகைப்படம் திராவிட மக்களை வாழ்த்தல் முதலான செய்திகள் இங்கு விளக்கப்பட்டுள்ளன.

**நகைமுத்து கருவுற்ற நிகழ்ச்சி**

மகள் நகைமுத்து மூன்று மாதம் கருவுற்றிருக்கிறாள். என்னும் செய்திகேட்டு பெற்றோர் இன்பத்தில் மூழ்கினர். நகைமுத்துவை நன்றாகப் பார்த்துக்கொள்ளுமாறு மலர்குழலாள் தங்கத்திடம் வேண்டினாள். அவளை அகத்தினில் வைத்து காப்பதாகக் கூறினாள். மாடு கன்றுகளைக் கவனிக்க வேறுஆள் இல்லாததால் மலர்க்குழலாள் வில்லியனூர்க்குப் புறப்பட்டாள். அவர்களுடைய வண்டி ஊரை நோக்கிச் சென்றது, உள்ளம் நகைமுத்துவைச் சுற்றியது.

வீடு திரும்பிய தங்கம் தோட்டத்தில் இருந்த அறையைத் திறந்து பழைய சாமான்கள் குவிக்கப்பட்டிருந்த அவ்வறையில் இருந்து பிள்ளைத் தொட்டிலை எடுத்தாள். இன்னும் ஏழு மாதம் இருக்கும்போதே பேரனைக் காணும் பேரவாவால் தொட்டிலைக் கண்டெடுத்தாய் என்று மணவழகன் கேலி செய்தான்.

**கணவனின் மகிழ்ச்சி**

மனைவி கருவுற்ற செய்தி கேட்ட வேடப்பன்

**வான் பெற்ற நிலவைப் போல**
**வந்தொரு குழந்தை என்னைத்**
**தேன்பெற்ற வாயால் அப்பா**

**எனத்தாவும் திங்கள் எழில்**
**என எண்ணி மகிழ்ந்தான்.**

**(குடும்ப விளக்கு 166)**

**பெற்றோர் செயல்கள்**

மாவரசும், மலர்க்குழலும் வில்லியனூரில் மகள் கருவுற்ற செய்தியைச் சொல்லாத இடமில்லை. அனைவரும் வந்து வாழ்த்துத் தெரிவித்தனர். இந்த வீட்டில் இஞ்சி முறைக்குது: எலுமிச்சை பழுக்குது என எப்போதும் போல வாழ்த்துச் சொன்ன குடுகுடுப்பைக் காரனுக்கு மகிழ்ச்சியுடன் புதுவேட்டி தந்து பூரித்தனர்.

பத்தாம் மாதம் வந்தது. மலர்க்குழலி தன் மகளோடு இருந்து செய்த உதவி உடலுக்கு உயிர் போன்றதாகும். ஒருநாள் நகைமுத்துக்குப் பிறக்க இருப்பது ஆணா, பெண்ணா என்று ஒருவரிடம் மலர்க்குழி கேட்டாள். பெண் பிறந்தால் என்ன செய்வீர்கள் என்று பெரியவர் கேட்க

**“மண்ணில் பட்டால் மாசுபடும் என்று என்**
**கண்ணில் வைத்துக் காப்பேன்”**

**குடும்ப விளக்கு**

என்றாள் மலர்க்குழலி.

ஆண் பிறந்தால் என்ன செய்வீர் எனக் கேட்க ஆணையும் அப்படி ஐயா என்றாள்.

**“ஆணும் பெண்ணும் நிகர்”**

என்னும் தன் கொள்கையை இவ்வாறு கவிஞன் பதிவு செய்துள்ளான்.

**குழந்தையைக் காணும் தந்தையின் நிலை**

நகைமுத்து இடுப்புவலி கொண்டாள். பெய் என்று உலகுக்குப் பெய்த வான்போல் கீச்சென்று குழந்தை அழுதது. அனைவரும் அச்சக்கடல் தாண்டி அகம் மகிழ்ந்தனர். மகளைக் காண வருக எனத் தாய் அழைக்க உள்ளே சென்ற தன் மனைவியையும் குழந்தையையும், வேடப்பன் கண்டான்.

**பெயர்சூட்டு விழா**

குழந்தையின் பெயர் சூட்டு விழாவிற்கு அறிவில் சிறந்த பெரியோர், அயலோர் உறவினர் அனைவரையும் அழைத்தனர். முத்துத்தேர் தங்கப் படிவத்தோடு வருவது போன்று நகைமுத்து குழந்தையோடு வந்தாள். அக்குழந்தையை வாங்கி, வேடப்பன் தமிழ்ப் பெரியோரிடம் தந்தான். அப்பெரியவர் அக்குழந்தைக்கு அமிழ்தம்மை என்று பெயரிட்டார். அமிழ்தம்மை வாழ்க என்று அனைவரும் வாழ்த்தினர். தந்தையும் தாயும் அப்யெர் சொல்லி அழைத்து மகிழ்ந்தனர்.

**தாலாட்டு :**

பொன்னே! மணியே! புது மலரே! செந்தேனே! தன்னேரில்லாத தழிழே! தமிழ்ப்பாட்டே என்று தாலாட்டுகிறாள் தாய். தொகைபோட்டு வாங்க, வொண்ணாத் தூய அமிழ்தே என்கிறார் தோழிப் பெண்கள். கற்புக்கரசி ஆதிமந்தியார், கல்விக்கரசி, ஔவையார், நச்செளளையார், இளவெயினியார் ,நக்கண்ணையார் என்று புலமைத் தாலாட்டுச் சொல்கிறாள் தங்கம். நின் அங்காப்பின் ஓசைக்கு

யாழிசையும் குழலிசையும் தமிழிசையும் ஈடாகாது என்கிறார் மலர்க்குழலி.

**பிள்ளையைத் தாக்கும் முறை** :

ஒருநாள் குழந்தையைத் தூக்க ஆசைப்பட்டான் வேடப்பன். குழந்தையின் இளந்தலை குளத்துத் தாமரை. அம்மலர்த்தண்டே அழகிய மெல்லுடல், தண்டுடல் மலர்த்தலை தாங்காதல்லவா? எனவே தலை உடல் இரண்டையும் ஒருங்குதாங்கி உலை அமிழ்தைவறியவள் ஒருத்தி தூக்கல் போல் தவறாது தூக்குவது தலையாய கடன் என்று சொல்லி குழந்தையைத் தூக்கிக் காட்டினாள் நகைமுத்து வேடப்பனும் அவ்வாறே தூக்கிப்பழகினான்.

**தாய்மையின் ஆற்றல் :**

ஒரு நாள் நள்ளிரவில் வேடப்பன் விழித்துப் பார்த்தான். மனைவி ஒருக்களித்துப் படுத்திருந்தாள். இடக்கையைக் கூடாரமாக்கித் துயின்று கொண்டிருந்தாள். ஒருநூல் புரண்டாலும் உருளையின் கீழ் மலர்போல என் பிள்ளை ஒழியுமே என நினைத்தான். அவளை விழிக்க வைக்க எண்ணி அவள் களைந்தெறிந்த மலர்க் கண்ணியை அவள் முகத்தில் எறிந்தான். சேயிழை விழிக்கவில்லை. குழந்தையை எழுப்புவேன் என நினைத்தான். மலரிதழ் ஒன்றைக் குழந்தை மீது போட்டான். தாயின் கைதாங் மலரிதழ்தனைத்துடைத்து மற்றும் தன் இடம் போயிற்று. தலைவன் தாய்மையின் ஆற்றல் கண்டான். தலைவிக்கு மதிப்புச் செய்தான். தாய்மைக்கு வணக்கம் செய்தான். தலைமட்டும் இரண்டென்றாலும் குழந்தையும் தாயும் ஒற்றைக்குலையேயாம். உயிரும் ஒன்றே உள்ளத்தின் கூறும் ஒன்றே. தாயும் குழந்தையும் வாயாற் பேசிக் கொள்வதிலும் கண்ணாலும் மனத்தாலும் அல்லவா பேசிக் கொள்கின்றனர்.

**குழந்தை வளர்ந்தது :**

**வான் பார்த்துக் கிடந்த மேனி**
**மண் பார்த்துக் கவிழ்ந்ததும் பின்னர்**
**தேன் பார்த்த மலர்க்கை யூன்றிச்**
**செம்மையாய்த் தவழ்ந்தும் நின்றும்**
**தோள் பார்க்க அங்கும் இங்கும்**
**தள்ளாடி நடந்தும் கொண்டை**
**மீன் பார்த்த கண்ணாள் பெண்ணாள்**
**ஓராண்டு மேல் உற்றாள்.**

**குடும்ப விளக்கு**

ஓராண்டு நிரம்பிய குழந்தையை ஓடி வா என்றாள் தாய். தானே குதிரையாகி அரசியாய் அவளைத் தாங்கினான் தந்தை காக்காவைக் காட்டிச் சோறூட்டினாள். நிலாவைக் காட்டி சிந்து பாடினாள் தாய். ஐயா என்றழைக்கிறதே! அயலானா நான்? தாத்தா இல்லையா எனக் கோபிக்க. உடனே தாத்தா என்று பேத்தி அழைக்கும் போது சிந்தை மகிழ்ந்தான் மாவரசு. ஒருநாள் தூங்கி எழுந்த அமிழ்து தாழ்வாராத்திலிருந்து மைக்கூட்டை எடுத்துக் கொல்லை முல்லைக் கொடியின் அருகில் சாய்த்து நீலம் சார்ந்த சோற்றால் சிற்றில் ஒன்ற செய்து முடித்தது. தந்தை உண்ணும் தயர்ச் சோற்றைத் தம் கையால் அள்ளி “ஆ” என்றது. அப்பனும் அதை வாங்கி உண்டு மகிழ்ந்தான். குழந்தை அன்னையானதை

அன்னை குழந்தையாகிப் பார்த்து மகிழ்ந்தாள். சேறும் சோறும் தந்தைக்குத் தேனோ? நீலத் தயிரும் நிலநிறத் தயிரோ தம்மக்கள் சிறுகை அளாவிய கூழ் அமிழ்தினும் இனியது என்ற வள்ளுவர் வாக்குப் பொய்க்குமோ?

**பெற்றோர் மகிழ்ச்சி – பேதையைச் செயல்கள் :**

மகள் நகைமுத்து மூன்று திங்கள் கருவுற்றிருக்கிறாள் என்னும் செய்தி கேட்டு இன்பப் பொய்கையில் வீழ்ந்தனர். அன்னை, மாமி, தங்கமோ மனம் பூரித்தாள். நகைமுத்து நலிவுறாமல் காக்க வேண்டும் எனத் தாய் தாழ்ந்து வேண்டினாள். என்றன் அகத்தினில் வைத்துக் காப்பேன் என்றான் தங்கம். மாவரசும், மலர்க்குழலும் தம் வீடு திரும்பினர். தோழிப் பெண்களிடம் நல்ல செய்தியைச் சொல்லி மகிழவே உடனே வந்தேன் என்றான் மாவரவு. வீடு திரும்பிய தங்கம் தோட்டத்தில் இருந்த அறையைத் திறந்து பழைய சாமான்கள் குவிக்கப்பட்டிருந்த அவ்வறைக்குள் இருந்தது பிள்ளைத் தொட்டிலை எடுத்தாள். இன்னும் ஏழு மாதம் இருக்கும் போதே பேரனைக் காணும் பேரவாவால் தொட்டிலைக் கண்டெடுத்தாய் என்று மணவழகன் கேலி செய்தான். அவளோ உணவையும் மறந்து கைப்பெட்டியைச் சிதைந்து போன வெள்ளிப் பாலாடையைக் கண்டான். எதிர்வந்தவளிடம் பார்த்தாயா இதனை என்றான். யானும் மணாளரும் ஒன்றுதான் என்றாள் தங்கம்.

**தங்கத்தின் தாய்மை உள்ளம் :**

தங்கம்; நகைமுத்தின் அருகிலேயே இருக்கலானாள். வெந்நீரை விரைந்து தருக என வேண்டும் வேடப்பனிடம் முன் போல வேலை வாங்கக் கூடாது என்ற தடுத்துத்தானே வெந்நீரை எடுத்துத் தந்தாள். நகைமுத்து முன்போல இல்லை. நலிவு செய்யாதே என்றாள். இரவில் மனைவியிடம் இதற்குரிய காரணம் கேட்டான் வேடப்பன். மூன்று விரல்கள் காட்டி முகம் நாணினாள். அவள் கருவுற்ற திங்கள் மூன்றா என்று அவன் கேட்க ஆம்! ஆம் இருநூறு தடைவ கேட்பீர் என்று நாணப்பட்டாள் தலைவி.

**கணவனின் மகிழ்ச்சி :**

மனைவி கருவுற்ற செய்தி கேட்ட வேடப்பன்,

> **வான் பெற்ற நிலவைப் போல**
> **வந்தொரு குழந்தை என்னைத்**
> **தேன்பெற்ற வாயால் அப்பா**
> **எனத்தாவும் திங்கள் எழில்**

**குடும்ப விளக்கு 166**

என எண்ணி மகிழ்ந்தான். பெற்ற தாயின் மடி மீது யாழ் கிடப்பது போல பிள்ளை கிடக்கும். "அம்மா" என்னும் அதன் அழைப்பிசை அமிழ்தின் ஊற்றாம். தன் அமிழ்தச் செம்பினையும் பாலுண்ணும் குழந்தையும் சேர்த்து மேலாடையினால் மூடி அவள் இடை அசைப்பாள்.

> **அன்பின் பணி காண்பேன் வையம் பெற்ற**
> **பயனைக் கண்ணாரக் காண்பேன் -**

எனப் பீலவாறு எண்ணி மகிழ்நதான்.

**முடிவுரை :**

சுருக்கொண்ட கால முதல் பெற்றோரும் கணவரும் மக்கட்பேறு எண்ணி மகிழும் திறமும் அன்புச் செயலும் தாலாட்டி மகிழ்வதும் தாய்மையின் ஆற்றலும் கிடந்தும் கவிழ்ந்தும் தவிழ்ந்ததும் நின்றும் நடந்தும் சிறுகை அளாவியும் மட்டற்ற மகிழ்ச்சி தரும் மாண்பும் என மக்கட்பேற்றின் சிறப்பினைச் சித்திரித்துள்ளார் புரட்சிக் கவிஞர்.

நூல்கள்
குடும்ப விளக்கு
முதல் பகுதி
பாரி புத்தக நிலையம்
சென்னை
குடும்ப விளக்கு
இரண்டாம் பகுதி
பாரி புத்தக நிலையம்
சென்னை